55

# சுருக்கம்

பொதுப்பணிகள் - தமிழ்நாடு அமைச்சுப் பணி - பள்ளிக் கல்வி - கருணை அடிப்படை பணி நியமனம் – பணிக்காலத்தில் காலமான அரசு ஊழியர் (லேட்) திரு.ப.சேகர் என்பவரின் மகள் செல்வி.சே.இசைவாணி, இளநிலை உதவியாளராக பணி நியமனம் - பணிவரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

## பள்ளிக் கல்வி(தொ.க.1(1)) துறை

அரசாணை (4ப) எண். 8

நாள்: 16 .11.2023.
திருவள்ளுவர் ஆண்டு 2054
சோபகிருது வருடம், ஐப்பசி மாதம் 30
படிக்கப்பட்டவை:-

1. அரசாணை(நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. பள்ளிக் கல்வி இயக்குநரின் ந.க.எண்.026920/ஜே/இ2/2023, நாள் 03.07.2023.

******

**ஆணை:-**

அரியலூர் மாவட்டம், இடையார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணிபுரியும் போது திரு.ப.சேகர் என்பார், பணிக்காலத்தில் 17.10.2015 அன்று காலமானார் என்றும், அன்னாரின் மகள் செல்வி.சே.இசைவாணி என்பார் கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு கேட்டு 14.01.2016 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த நாள் 18.01.1997 என்றும், அவர் இடைநிலைக் கல்வி (எஸ்.எஸ்.எல்.சி) பள்ளியிறுதி வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், இவருக்குப் பணிவாய்ப்பு வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் மறுப்பு ஏதும் தெரிவிக்கவில்லை என்றும், அவரது குடும்பம் வறிய சூழ்நிலையில் இருந்தது என்றும், பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுதாரருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டப்படி, செல்வி.சே.இசைவாணி என்பவர், இளநிலை உதவியாளராக 14.10.2022 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து, பணிபுரிந்து வருகிறார் என்றும், எனவே, அன்னாரின் பணியினை வரன்முறை செய்யுமாறு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பள்ளிக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

Scanned with OKEN Scanner

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட பள்ளிக் கல்வி இயக்குநரின் பரிந்துரையை, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, அரசு நன்கு ஆய்வு செய்து, அரியலூர் மாவட்டம், இடையார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணிபுரியும்போது பணிக்காலத்தில் பணியிடைக் காலமான திரு.ப.சேகர் என்பவரின் வாரிசான அவரது மகள் செல்வி.சே.இசைவாணி என்பவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு, தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பள்ளிக்கல்வித் துறையில் இளநிலை உதவியாளர் பதவியில் 14.10.2022 முற்பகல் முதல் பணிபுரியும், அவரது பணியினை வரன்முறைப்படுத்திட, அவர் தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், அவர் பணியில் சேர்ந்த நாளான 14.10.2022 முற்பகல் முதல் வரன்முறை செய்யலாம் என முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்னாளிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், அவர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை இருப்பின் அவற்றை விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ. குமரகுருபரன்
அரசு செயலாளர்

பெறுநர்
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை-6.
முதன்மைக் கல்வி அலுவலர், அரியலூர் மாவட்டம்.
தனியர் (பள்ளிக்கல்வி இயக்குநர் வழியாக)
(அசல் ஆவணங்கள் மற்றும் பணிப்பதிவேடு இணைப்புகளுடன்)

**நகல்:-**
பள்ளிக் கல்வி (அநமு பிரிவு) துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

18/11/2023
பிரிவு அலுவலர்.

Scanned with OKEN Scanner

அரியலூர் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ஓ.மு.எண். 02831/அ1/2023, நாள். 31.01.2024

பொருள் பள்ளிக்கல்வித்துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படை நியமனம் – பணிவரன்முறை – அரியலூர் மாவட்டம் – ஜெயங்கொண்டம் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் பணிபுரிந்து வரும் இளநிலை உதவியாளர் செல்வி.சே.இசைவாணி என்பாருக்கு அவர்தம் இளநிலை உதவியாளர் பதவியை வரன்முறை செய்து ஆணை வழங்கியமை – அசல் ஆணை மற்றும் அசல் பணிப்பதிவேடு – அனுப்பி வைத்தல் – சார்பு.

பார்வை 01. அரசாணை(4ப)எண்.8,பள்ளிக் கல்வி (தொ.க.1(1))துறை, நாள்.16.11.2023.
02.சென்னை–06, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.26932/ஜே/இ2/2023, நாள். .01.2024
03.அரியலூர் முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண். 02831/அ1/2023, நாள். 24.06.2023
04.ஜெயங்கொண்டம் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியரின் ந.க.எண்.0071/2023, நாள்.15.05.2023.

------------

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் பணிபுரிந்து வரும் இளநிலை உதவியாளர் செல்வி.சே.இசைவாணி என்பாருக்கு அவர்தம் இளநிலை உதவியாளர் பதவியினை வரன்முறை செய்து ஆணை வழங்க கோரிய கருத்துருக்கள் பார்வை 4 –ல் கண்டுள்ளவாறு பெறப்பட்டு, பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கு பணிந்தனுப்பி வைக்கப்பட்டது. அதனடிப்படையில், செல்வி.சே.இசைவாணி என்பவருக்கு, இளநிலை உதவியாளர் பணியில் 14.10.2022 முற்பகல் பார்வை(1)–ல் கண்டுள்ள அரசாணையின்படி, பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

இவ்விவரத்தினை அன்னாரின் அசல் பணிப்பதிவேட்டில் பதிவு செய்திடவும், அசல் ஆணை, அசல் கல்வித் தகுதி சான்றுகள் மற்றும் அசல் பணிப்பதிவேடு பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலை அனுப்பி வைத்திடவும் சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமைஆசிரியர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**இணைப்பு–**
அசல் ஆணை மற்றும் அசல் பணிப்பதிவேடு
மற்றும் அசல் கல்வித் தகுதி சான்றுகள்

முதன்மைக்கல்வி அலுவலர்,
அரியலூர்.

பெறுநர்
1. தலைமை ஆசிரியர், அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளி, ஜெயங்கொண்டம்
2. சம்மந்தப்பட்ட பணியாளர் (உரிய வழியாக)

Scanned with OKEN Scanner